*2020 செப்டம்பர் 15*]

கிடக்கின்றன; நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர. முத்தமிழ்செல்வன் அவர்கள்.

**திரு. ர. முத்தமிழ்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பரிசீலனையில் இல்லையென்றாலும், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டு கொடுக்கிறவர் அல்ல, கேட்காமலேயே அள்ளி, அள்ளி கொடுக்கின்றவர். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதி மக்களின் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமென இந்த நேரத்திலே பணிந்து கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**9—**

**செயற்கை கருத்தரிப்பு மருத்துவ வசதி**

***57208—திரு. த. மனோ தங்கராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, தக்கலை அரசு மருத்துவமனையில் செயற்கை கருத்தரிப்பு மருத்துவ வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை நமக்குக் கற்றுக் கொடுத்த பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியிலே ஆட்சியையும், கட்சியையும் வழிநடத்திய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியிலே

நல்லாட்சியை நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் பகுதியில் உள்ள மருத்துவமனையில் செயற்கை கருத்தரிப்பு மருத்துவ வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். செயற்கைமுறை கருத்தரிப்பு சிகிச்சை என்பது, உயர் சிறப்பு சிகிச்சைப் பிரிவைச் சார்ந்ததாகும். மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே படிப்படியாக அந்தச் சிகிச்சையை நாம் அறிமுகப்படுத்தி வருகின்றோம். கட்டணம் இல்லாத கருத்தரிப்பு மையங்கள் என்பது சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டது; கன்னியாகுமரி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று அதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, புற நோயாளிகள் பிரிவு செயல்பட்டு வருகின்றது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில்தான் உயர் சிறப்பு சிகிச்சை பெற முடியும். வரக்கூடிய காலகட்டங்களில், பத்மநாபபுரம் மருத்துவமனை போன்ற சிறப்பாகச் செயல்படக்கூடிய மருத்துவமனைகளில் தேவைக்கேற்ப புற நோயாளிகள் பிரிவினை தொடங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரடங்கால் ஏற்பட்ட பசிப் பிணியைப் போக்கிய எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற தலைவர் அவர்களே, என்னுடைய பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தக்கலை அரசு மருத்துவமனை ஒரு மாவட்ட தலைமை மருத்துவமனையாகும். இம்மருத்துவமனைக்கு ஒவ்வொரு நாளும் சுமார் 1,700–க்கும் மேற்பட்ட புற நோயாளிகள் வருகின்றார்கள். இந்த மருத்துவமனை NABH (National Accreditation Board for Hospitals) அங்கீகாரம் பெற்ற ஒரு மருத்துவமனை. அப்படியிருந்தும், அந்த மருத்துவமனையில், முழுநேரமும் செயல்படக்கூடிய வகையில் சிறுநீரகவியல் நிபுணர், தோல் நோய் நிபுணர் போன்றவர்கள் இல்லையென்ற ஒரு குறைபாடு இருந்து கொண்டிருக்கின்றது. இந்த நேரத்தில்,

*2020 செப்டம்பர் 15*]

இன்றைக்கு வாழ்க்கை முறையில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள், உணவுப் பழக்கவழக்கங்களில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள், இளைஞர்களிடத்திலே இருக்கக்கூடிய சில தகாத பழக்கங்கள், புகையிலை பழக்கங்கள் போன்றவற்றால் கருத்தரிப்பில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். இதனால் செயற்கைமுறை கருத்தரிப்பிற்கு தனியார் மருத்துவமனைக்கு அவர்கள் செல்கின்ற நேரத்தில், அதற்கான கட்டணமாக ரூ.2 இலட்சம் முதல் ரூ.5 இலட்சம்வரை வசூலிக்கின்ற காரணத்தினால், ஏழை, நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். எனவேதான் ஒரு செயற்கைமுறை கருத்தரிப்பு மையத்தை அரசு மருத்துவமனையில் ஏற்படுத்த வேண்டும். அதிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் மையப் பகுதியில் இருக்கக்கூடிய தக்கலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலே இம்மையத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை மாவட்ட மக்களின் சார்பில் நான் முன்வைக்கின்றேன். இன்றைக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில், புற நோயாளிகள் பிரிவு ஒன்று மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே செயல்படுவதாகக் கூறினார்கள். ஆனால், அப்படி எதுவும் அங்கு செயல்படுவதாகத் தகவல் இல்லை. அனைத்து மக்களும், செயற்கைமுறை கருத்தரிப்பிற்கு தனியார் மருத்துவமனைகளை நம்பியிருக்கக்கூடிய ஒரு நிலைமைதான் அங்கு இருக்கிறது. எனவே, எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, இந்த ‘COVID’ காலத்திலேகூட அரசு மருத்துவமனைகளில் குறிப்பாக, மகப்பேறு மருத்துவர்கள், pediatrician என்று சொல்லக்கூடிய குழந்தை மருத்துவ நிபுணர்கள், மயக்க மருந்து நிபுணர்களுடைய பங்கு என்பது அளப்பரியது. ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரை, இந்த 4 மாதங்களில் மட்டும் அரசு மருத்துவமனைகளிலே 3,82,444 பிரசவங்களை இந்த ‘COVID’ காலத்திலே சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். குறிப்பாகப் பார்த்தீர்களென்றால், கர்ப்பிணிப் பெண்களுக்கு ‘COVID’ பாதிப்பு.

4,620 என்ற அளவில் கர்ப்பிணிப் பெண்களுக்காக மட்டுமே சிறப்பான சேவையை அரசு மருத்துவர்கள் வழங்கியிருக்கிறார்கள். கடந்த முறை சட்டமன்றத்திலே நீங்கள் கருத்தரிப்பு மையம் குறித்து சொன்ன கருத்தையெல்லாம் அரசு உணர்ந்த காரணத்தினால்தான் தமிழகத்திலே கட்டணம் இல்லாத கருத்தரிப்பு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்ற ஓர் அறிவிப்பை வெளியிட்டு, அது அரசாணையாக்கப்பட்டு, படிப்படியாக அதைச் செயலாற்றிக் கொண்டு வருகின்றோம்.

நீங்கள் சொன்னதுபோல, பத்மநாபபுரம் மருத்துவமனை National Quality Assurance Standards and Kayakalp போன்ற பல்வேறு விருதுகளையெல்லாம் பெற்று மிகச் சிறப்பாகச் செயல்படக்கூடிய மருத்துவமனை. கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் நானே நேரடியாக அங்கு சென்று, ஆய்வுகளை மேற்கொண்டேன். இப்பொழுது Super Speciality Section, ஓர் உயர் சிறப்பு பிரிவு அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையினால், அது பற்றிய விவரம் உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். கன்னியாகுமரி மாவட்டத்திலே 10 பேர் அதிலே பதிவு செய்து, சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். வரக்கூடிய காலங்களிலே, தாங்கள் குறிப்பிடுகின்ற மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் உயர்தர சிறப்பு சிகிச்சைகளை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை படிப்படியாக அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேச்சிப்பாறை, கோதையாறு, கடையாலு மூடு மற்றும் பொன்மனை போன்ற மலைக் கிராமங்களை உள்ளடக்கி இருக்கக்கூடிய பகுதி, குலசேகரம் பகுதி. அது ஒரு பேரூராட்சிப் பகுதி. அங்கிருக்கக்கூடிய அரசு மருத்துவமனையில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும், போதிய இட வசதியும் இருக்கிறது. அங்கு 4 மருத்துவர்கள் இருக்கிறார்கள். அதில் எப்பொழுதுமே ஏதாவது ஒரு மருத்துவர் உயர் படிப்பிற்காக நீண்ட விடுப்பிலே சென்று விடுகிறார். எனவே, முழுநேரம் அங்கு மருத்துவர்கள் இருப்பது என்பது சாத்தியமில்லாமல் இருந்து கொண்டிருக்கிறது.

*2020 செப்டம்பர் 15*]

அதேபோன்று மகப்பேறு மருத்துவர்கள் வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக இந்த அவையின்முன் நான் வைத்துக்கொண்டிருக்கின்றேன். இன்றைக்கும் நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுவது என்னவென்றால், சுமார் 40 மலைக் கிராமங்கள் சுற்றியிருக்கக்கூடிய பகுதியில் அமைந்திருக்கக்கூடிய குலசேகரம் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தினால் மட்டும்தான் மலைவாழ் மக்களுக்கு ஒரு விடிவு காலம் வரும். ஏனென்றால், அவர்களுக்கு சிறு, சிறு பாதிப்புகள் வருகின்ற நேரத்தில்கூட, சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் உள்ள தக்கலை அரசு மருத்துவமனைக்குத்தான் அவர்கள் செல்ல வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. இப்போது இந்த ஊரடங்கு காலகட்டத்தில் வாகன வசதி போன்றவை எல்லாம் மிகப் பெரிய பிரச்சினையாக அவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. இந்த 4, 5 மாதங்களாக அவர்கள் அல்லல்பட்டதை நான் நேரடியாகப் பார்க்க முடிந்தது. எனவே, அந்த மலைவாழ் மக்களுடைய பிரச்சினைகளை, இன்னும் சரியாகப் பேருந்து வசதிகள் எல்லாம் இல்லாமல் இருக்கக்கூடிய பகுதியில் வாழக்கூடிய ஏழையெளிய மக்களுடைய பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, குலசேகரம் அரசு மருத்துவமனையில் இருக்கக்கூடிய இட வசதியையும், அங்கிருக்கக்கூடிய கட்டமைப்பையும் பயன்படுத்துகின்றவிதத்தில், அங்கு போதுமான பணியாளர்களையும், கூடுதல் மருத்துவர்களையும், படுக்கை வசதிகளையும் ஏற்படுத்தி, அந்த மருத்துவமனையை மேம்படுத்தித் தர வேண்டும். நான் கேட்டது போன்று, தக்கலை அரசு மருத்துவமனைக்கு ஒரு முழுநேர Urologist மற்றும் Skin specialist போன்றவர்களையும் நீங்கள் பணியமர்த்த வேண்டும். அங்கிருக்கக்கூடிய 'யோகா' மற்றும் இயற்கை மருத்துவத் துறைக்கு கட்டடம் இல்லாத பிரச்சினையை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றேன். எனவே, ஆய்வகத்திற்கும், யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பிரிவிற்கும் போதிய கட்டட வசதியை நீங்கள் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு விடைபெறுகின்றேன். வணக்கம்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தாங்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல, மருத்துவர்களைப் பொறுத்தவரையில், ஒவ்வோர் ஆண்டும் மேற்படிப்பிற்கான வாய்ப்பைப் பெற்று அவர்கள் படிக்கச் செல்வது என்பது ஒரு வழக்கமான நடைமுறை. அப்படி அவர்கள் செல்கின்றபோது அதில் ஏற்படுகின்ற காலி இடங்களில் பணியமர்த்துவதற்கென மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் (MRB) புதிய மருத்துவர்களை மீண்டும் நாம் நியமனம் செய்து கொண்டிருக்கின்றோம். இந்த கோவிட் நோய்த் தொற்றுக் காலத்தில்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு 2,751 மருத்துவர்கள், 6,093 செவிலியர்கள் உட்பட 15,000 பேருக்கு பணி நியமனம் செய்து அவர்களுடைய சேவையை உறுதிப்படுத்தி இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கூடுதல் மருத்துவர்கள் நியமனம், அதேபோன்று கூடுதல் கட்டமைப்பு வசதி போன்றவற்றை அரசு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சி தந்த கருவூலம், கற்பூரப் பெட்டகம், இந்நாட்டின் இங்கர்சால், தென்னாட்டின் பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா அவர்களின் 112 ஆவது பிறந்தநாள் விழாவில் அவருடைய நினைவை என்றென்றும் போற்றுவோமாக! இந்திய சுதந்திர வரலாற்றில், ஒரே ஆண்டில் நமது மாநிலத்தில் 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளைக் கொண்டுவந்து மருத்துவ சிகிச்சைக்கு தமிழகம் உலகத்திற்கே வழிகாட்டி என்கிற சாதனையைப் படைத்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குத் துணை நின்ற நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்.

என்னுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில்கூட, இந்த ஐந்தாண்டு காலத்தில் வடசிற்றூர் பகுதியில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கேட்டவுடன் நம்முடைய மாண்புமிகு

*2020 செப்டம்பர் 15*]

முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். மேலும், பொள்ளாச்சியில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாவட்ட மருத்துவமனையில் புதியதாக 9 மாடிகள் கொண்ட O.P. Block கட்டப்பட்டு வருகின்றது. அதில் 5 மாடிக்கான கட்டடப் பணிகள் வேகமாக நடந்து முடிந்துள்ளன. 6 ஆவது மாடி கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று Maternity and Child Health Care–ன் 6 மாடிக் கட்டடப் பணிகளில் 3 மாடி கட்டடப் பணிகள் முடிந்து 4 ஆவது மாடி கட்டடப் பணிகள் தொடங்கப்படவுள்ளன. மருத்துவத் துறையில் உலகத்திற்கே வழி காட்டுகின்ற மாநிலம் எது என்று சொன்னால், நம்முடைய அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் நடக்கின்ற தமிழகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த கொரோனா தொற்றுநோய் பரவல் காலத்தில் வல்லரசு நாடுகள்கூட 'ஐயோ! ஐயோ!' என்று அலறுகிற நேரத்தில், நோய் தொற்றிய நிலையில் தமிழக மக்களைப் பாதுகாப்பதிலும், நோய் தொற்றாமல் மக்களைப் பாதுகாப்பதிலும் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது , உலகத்திற்கே வழிகாட்டுகிற இந்த நல்ல நேரத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்தில் ஒரு கோரிக்கை. என்னுடைய தொகுதியில் ஒரே ஒரு குறை. இந்த ஐந்தாண்டு காலத்தில் அதையும் செய்து கொடுத்துவிட்டால் நிறைவாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதியில், கேரள மாநில எல்லையில் இருக்கின்ற இராமபட்டினம் ஆரம்ப சுகாதார நிலையம் பற்றி நீண்ட நாட்களாக நான் உங்களிடத்தில் கோரிக்கை வைத்திருக்கின்றேன். சென்ற ஆண்டே நிறைவேற்றித் தருவதாகச் சொன்னீர்கள். விஷக்கடி அங்கே அதிகமாக உள்ளது. எனவே, 30 படுக்கை வசதிகள்கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக இராமபட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கண் ஜாடையைப் பெற்று இந்த ஆண்டே தரம் உயர்த்தி இப்பொழுதே நீங்கள் உத்தரவு வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

அவர்கள் சுகாதாரத் துறையில் கேட்ட அத்தனை கோரிக்கைகளையும் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் சொன்னதுபோல் இந்த இராமபட்டினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அரசினுடைய மிகக் கனிவான பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய எதிர்பார்ப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் பூர்த்தி செய்வார்கள் என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**10—**

*மாணவர்கள் விடுதி*

***58202—திரு. ஆர். நடராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்றென்றும் வணங்கும் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்கும் திசை நோக்கி எனது முதல் வணக்கத்தைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சிறப்பான ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன்.